P.R.NO:10.

நாள்: 05.07.2017.

# செய்தி குறிப்பு

## டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்குதல்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களது மகன்/மகள் ஆகியோருக்கு டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மார்ச் 2017-ல் தேர்வெழுதி தேர்ச்சி பெற்றுள்ள நெசவாளர்கள் வாரிசுகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகையும், பன்னிரெண்டாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அவர்களது உயர் கல்விக்கு 33 பாடப்பிரிவுகளில் ஒவ்வொரு ஆண்டும், அவர்களது கல்வி முடிவு பெறும் வரை தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் தங்களது சங்க மேலாண்மை இயக்குநரிடம் விபரங்களை பெற்று உரிய விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உதவி இயக்குநர்,
கைத்தறி மற்றும் துணிநூல்,
திருநெல்வேலி.

வெளியீடு.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.